# அஷ்யூரன்ட் நிறுவனம் - சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!... முதல் பக்கத் தொடர்ச்சி

அதனைத் தொடர்ந்து, 3.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் ஈட்டன் மற்றும் அஷ்யூரன்ட் நிறுவனங்களுடன் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

**ஈட்டன் நிறுவனம்**

ஈட்டன் கார்ப்பரேஷன் (Eaton Corporation) நிறுவனம் என்பது தரவு மையம், பயன்பாடு, தொழில்துறை, வணிகம், இயந்திர கட்டிடம், குடியிருப்பு, விண்வெளி மற்றும் இயக்க சந்தைகளுக்கான உற்பத்தி மற்றும் பகிர்மான பணிகளை மேற்கொள்ளும் மேலாண்மை நிறுவனமாகும். குடியிருப்பு, வணிக கட்டிடம், மின்சார வாகனங்கள், தரவு மையம் மற்றும் eVTOL வாகனங்களுக்கான ஆற்றல் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் மற்றும் நுகர்வுக்கு அவற்றின் தயாரிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் தலைமையகங்கள் அயர்லாந்து நாட்டின் டப்ளின் மற்றும் அமெரிக்க நாட்டின் ஓஹியோவின் பீச்வுட் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. உலகளவில் 35 நாடுகளில் சுமார் 208 இடங்களில் உற்பத்தி வசதிகள் கொண்ட பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

**ஈட்டன் நிறுவனம் மூலம் 500 பேருக்கு வேலைவாய்ப்பு!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், ஈட்டன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே, 200 கோடி ரூபாய் முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் தற்போதுள்ள ஈட்டன் நிறுவனத்தின் உற்பத்தி வசதியை விரிவாக்குவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய பயன்பாட்டு பொறியியல் மையத்தை (Global Utility Engineering Centre) நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், ஈட்டன் நிறுவனத்தின் குளோபல் எனர்ஜி தலைவர் மேத்யூ ஹாக்மேன் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**அஷ்யூரன்ட் நிறுவனம்**

அஷ்யூரன்ட் நிறுவனம் (Assurant, Inc.) பார்ச்சூன் 500 இன்சூரன்ஸ் நிறுவனங்களில் ஒன்றாகும், இந்நிறுவனம் அட்லாண்டாவை தலைமையிடமாக கொண்டு இடர் மேலாண்மை தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது. சொத்து, விபத்து, நீட்டிக்கப்பட்ட சாதனங்களின் பாதுகாப்பு போன்ற பலவிதமான சிறப்பு மற்றும் முக்கிய சந்தை காப்பீட்டுத் திட்டங்களை வழங்கி வருகின்றன. இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின் அட்லாண்டாவில் அமைந்துள்ளது.

**அஷ்யூரன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், அஷ்யூரண்ட் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே, அஷ்யூரண்ட் நிறுவனத்தின் இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தை (GCC) சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், அஷ்யூரண்ட் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் பிஜு நாயர் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், இ.ஆ.ப., தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 3.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், அஷ்யூரண்ட் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே, அஷ்யூரண்ட் நிறுவனத்தின் இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தை (GCC) சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, அஷ்யூரண்ட் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் பிஜு நாயர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தி.மு.க. முப்பெரும் விழாவில் பெருந்திரளாகப் பங்கேற்போம்!

## திருவாரூர் மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், செப். 5-

சென்னையில் நடைபெற இருக்கும் கழக முப்பெரும் விழாவில் திருவாரூர் மாவட்டத்தில் இருந்து பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் பெருந்திரளாக பங்கேற்போம் என மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்ட தி.மு.க. பொதுஉறுப்பினர்கள் கூட்டம் அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., பங்கேற்றுசிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு,

இந்திய துணைப்பெரும் கண்டமே பாராட்டும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் சாதனை திட்டங்களான காலை உணவு திட்டம், மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன், மக்களை தேடி மருத்துவம், போன்ற அரிய திட்டங்களை தந்து மக்களின் நன் மதிப்பை பெற்று நாடாளுமன்ற தேர்தலில் 40/40 வெற்றிக்கு வழிவகுத்த கழக தலைவர் தளபதி அவர்களுக்கு பாராட்டு,

கழக இளைஞர் அணி செயலாளராக பொறுப்பேற்று, தமிழ்நாடு முழுவதும் பயிற்சிப்பாசறை, இளைஞர் அணியின் இரண்டாவது எழுச்சி மாநாடு, 40 தொகுதிகளிலும் சூறாவளி சுற்று ப்பயணம், தமிழ் நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் , முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள், சென்னையில் சர்வதேச தரத்தில் கார் ரேஸ் உள்ளிட்டவைகளை நடத்தி இளைஞர்கள் நெஞ்சில் நிறைந்தி ருக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதல்வர் பொறுப்பு வழங்குதல்,

எதிர்வரும் செப்டம்பர்17 அன்று சென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவிற்கு சுவர் விளம்பரம் செய்வதோடு மாவட்டம் முழுவதிலும் இருந்து பெருந்திரளாக பங்கேற்பது. பவளவிழா காணும் நமது கழகத்தை போற்றும் விதமாக கலைஞர் நூறாண்டு விழா சிறப்பு கொடிமேடைகளை அமைத்து கழக கொடிகளை ஏற்றுவது,

எதிர்வரும் சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று கழக ஆட்சியை அரியணை ஏற்றுவது, உலகையே உலுக்கிய இயற்கையின் கோரத் தாண்டவமான கேரளா வயநாடு நிலச்சரிவில் உயர் நீத்த மக்க ளுக்கு இரங்கல் தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.




கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் வரதராஜபுரம் சாய்விவாகா மகாலில் நடைபெற்றது. கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் தலைமை தாங்கி, தலைமை உரையாற்றினார். மாவட்டக் கழக நிர்வாகிகள் கணபதி ராஜ்குமார் எம்.பி., மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி. முருகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கோவை மாநகராட்சி மேயர் இரா.ரங்கநாயகி, தலைமைக் கழக நிர்வாகிகள் பி.நாச்சிமுத்து, வழக்கறிஞர் கே.எம். தண்டபாணி, மு.இரா.செல்வராஜ், நா.முருகவேல், அ.தமிழ்மறை, டாக்டர் கோகுல் கிருபா சங்கர், வி.ஜி.கோகுல், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக்கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நிலைக் குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதிக்கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், BLA2 பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழகத் தொண்டர்கள், மற்றும் கழக பொது உறுப்பினர்கள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியில், சிங்காநல்லூர் பகுதி2 திமுக செயலாளர் சிங்கை மு.சிவா நன்றி கூறினார்.

## பாராலிம்பிக் போட்டி:

# குண்டு எறிதலில் இந்தியாவிற்கு வெள்ளிப் பதக்கம்!

பாரீஸ், செப். 5 -

பாரீஸ் பாராலிம்பிக் தொடரில் ஆடவர் குண்டு எறிதல் போட்டியில் இந்திய வீரர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

16.32 மீட்டர் தூரம் குண்டு எறிந்து இந்திய வீரர் சச்சின் சர்ஜோராவ் வெள்ளிப் பதக்கம் வென்றார். குண்டு எறிதலில் வெறும் 6 சென்டி மீட்டரில் தங்கப் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இந்திய வீரர் சச்சின் தவறவிட்டார்.

சச்சின் கிலாரி 40 ஆண்டுகளில் பாராலிம்பிக் ஷாட்புட்ல் பதக்கம் வென்ற முதல் ஆண் தடகள வீரர் ஆனார்






சுதேசி இயக்கத்திற்கு இலக்கணமாய்த் திகழ்ந்து, தியாகத்தின் முழு உருவான 'செக்கிழுத்த செம்மல்' வ.உ.சிதம்பரனாரின் பிறந்தநாளில் அவரது தியாகத்தைப் போற்றிடுவோம் !

**மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

கப்பலோட்டிய தமிழன்
**வ.உ.சிதம்பரனார்** அவர்களின்
**153-ஆவது பிறந்த நாள்**

தமிழ்நாடு அரசின் சார்பில்
**கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார்** அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**நாள் : 5.9.2024, வியாழக்கிழமை, காலை 9.00 மணி**
**இடம் : காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை**

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in **இயக்குநர்,** செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 600 009.

செ.ம.தொ.இ / 914 / வரைகலை / 2024